**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 61 of 2017 |

Depositions of PW - 4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : பிரேம் ஆனந்த், காவல் ஆய்வாளர்.

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது சூலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் நான் இவ்வழக்கில் சாட்சியமளிக்கிறேன். கடந்த 20.04.2015 ஆம் தேதி சூலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் திரு.பொன்ராஜ் அவர்கள் நிலைய அலுவலில் இருந்த பொழுது ஆறுமுகம் மகன் சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று வழக்கு தன்மைப்படி, சூலூர் காவல் நிலைய குற்ற எண் 262/2015 சட்டப்பிரிவுகள் 279 மற்றும் 337 இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.**2 குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை

புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதியம் 2:30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சாந்தகுமார் மற்றும் சதீஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ.3** குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** குறியீடு செய்யப்படுகிறது.

2. சாட்சிகள் சக்திவேல் சாந்தகுமார் சதீஷ்குமார் மற்றும் விவேகானந்தன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து சம்பவத்தில் காயமடைந்த கதிர்வேல் அவர்கள் சிகிச்சை பலனின்றி 21.04.2015 ஆம் தேதி இறந்துவிட்ட தகவல் கிடைக்கப்பெற்று வழக்கின் சட்ட பிரிவை 229,337 இதச இல் இருந்து 279, 304-A இன் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இறப்பிற்கான காரணம் அறிய வேண்டி வழக்கில் இறந்த கதிர்வேல் என்பவர் பிரேதத்தின் மீது உதவி ஆய்வாளர் அவர்கள் பஞ்சாயத்தாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு உள்ளார். மேலும் பிரேத விசாரணை சாட்சிகள் விவேகானந்தன் தண்டபாணி, சக்திவேல், புவனேஸ்வரி, ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் சம்பவத்தில் இருந்த சாந்தகுமார் அவர்களின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக உட்படுத்தியுள்ளார்.

3. இவ்வழக்கின் எதிரி தன்னிச்சையாக நிலையம் ஆஜரானவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலைய ஜாமுனில் விடுவித்துள்ளார். சம்பவத்தில் எதிரி ஓட்டிச் சென்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை கிடைக்கப்பட்டுள்ளார். ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.6** குறியீடு செய்யப்படுகிறது. மேலும் சம்பவத்தில் இறந்த கதிர்வேல் அவர்கள் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை கிடைக்கப்பட்டுள்ளார் ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.7** செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வாளர் வேலுமணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவத்தில் இறந்த கதிர்வேல் அவர்களுக்கு சிகிச்சை அளித்த கே.எம்.சி.எச் மருத்துவமனை மருத்துவர் கேசவ மூர்த்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இறப்பு கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளார். இறப்பு கடிதம் **அ.சா.ஆ.8** குறியீடு செய்யப்படுகிறது. மேலும் கதிர்வேல் அவர்களின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட கோவை அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. குழந்தைவேலு அவர்களை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்க பெற்றுள்ளார். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் சக்திவேல் மற்றும் சாந்தகுமார் அவர்களை விசாரித்து மறுவாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட உதவியாளர் பொன்ராஜ் அவர்களை விசாரித்துள்ளார். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவு 279 மற்றும் 304-ய A ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் நேரம் அடித்தல் திருத்தலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் ஆம்புலன்ஸ் ஓட்டுநரை சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் முன்னாள் சென்ற காரை முந்த முற்பட்ட பொழுது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் பின்னால் வந்த காரை முந்த முற்பட்ட பொழுது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் விபத்தானது அன்னை டவர் முன்பாக நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் அன்னை டிராவல்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறுதலாக அன்னை தவஸ் என்பதற்கு பதிலாக அன்னை ட்ராவல்ஸ் என குறிப்பிட்டுள்ளார்கள். எதிரியின் அஜாக்கிரதையால் சம்பவ விபத்து ஏற்படவில்லை என்றும் சம்பவத்தில் இருந்த நபர் சாலை விதிகளை பின்பற்றாமல் வேகமாக சென்றதால் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**